## +2 வணிகவியல்

### பாடம் 1: மேலாண்மையின் தத்துவங்கள்

**1.மேலாண்மை:** மேலாண்மை என்பது திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளோடு தொடர்புடையது நிறுவனத்தின் பணியாளர்களை கொண்டு அவ்வணிக முடிவுகளை நிறைவேற்றம் செய்வதை குறிக்கும்.

**2. மேலாண்மையின் வரைவிலக்கணம்:** மேலாண்மை என்பது பன்நோக்கு செயல் அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது மேலாளரை மேலாண்மை செய்கிறது மேலும் பணியாளரையும் பணியினையும் மேலாண்மை செய்கிறது **- பீட்டர் F டிரக்கர்**

மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது **- ஹென்றி ∴போயல்**

**3. மேலாண்மையில் பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?** வணிகத்தை மேலாண்மை செய்தல் மேலாளரை மேலாண்மை செய்தல் பணியாளர்களையும் பணியினையும் மேலாண்மை செய்தல் என்பதை பீட்டர் டிரக்கர் தனது வரைவிலக்கணத்தில் முக்கியத்துவப்படுத்தி உள்ளார்

ஒரு மேலாளர் மேற்கூறிய மூன்றையும் திறமையாக சமன் செய்து ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.

எனவே மேலாளர் சூழ்நிலைக்கு ஏற்ப நெகிழ்வுதன்மை கொண்டவராகவும் வியாபாரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் செயல்படுகிறார்

**4. மேலாளர்:** ஒரு நிறுவனத்தின் மேலாண்மையை ஏற்பவர் மேலாளர்.


**5.மேலாளரின் பணிகள்:** மேலாளர் நிர்வாக மற்றும் பணி சார்ந்த செயல்பாடுகள் என இரண்டையும் மேற்கொள்கிறார் மேலாளர் அந்நிறுவனத்தின் மனிதவளம் இயந்திரங்கள் பொருள்கள் பணம் ஆகிய நான்கு வளங்களையும் அதன் செயல்பாடுகளையும் திறம்பட ஒருங்கிணைக்க வேண்டும்

ஒரு மேலாளர் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பணியமர்த்தல், இயக்கி வைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் மூலம் வளங்களை திறம்பட ஒருங்கிணைக்க வேண்டும்

**6 மேலாண்மை வீச்செல்லை தீர்மானிப்பவை:** தனிப்பட்ட மேலாளர்களின் பணியில் உள்ள மனோபாவத்தை செல்வாக்கு தொழில் நிறுவனத்தின் கட்டமைப்பு ஆகிய இரண்டும் மேலாண்மை வீச்செல்லை தீர்மானிக்கிறது

**7. மேலாண்மை வீச்செல்லையின் தாக்கங்கள்:** மேலாண்மையின் பரப்பு என்பது நிர்வாகக் கட்டமைப்பின் கிடைமட்ட நிலைகளோடு தொடர்புடையது.

எடுத்துக்காட்டு பரந்த அளவுள்ள மேலாண்மை பரப்பில் குறைவான அதிகாரப் படிநிலை மட்டங்கள் இருக்கும் குறுகிய மேலாண்மை பரப்பில் அதிக படிநிலை மட்டங்கள் பகுதியாக இருக்கும்




**8. தனி மனித வாழ்வில் மேலாண்மையின் முக்கியத்துவம்:** விளையாட்டுத் திடலில், நூலகத்தில், வகுப்பறையில், விடுதியில் எங்கிருந்தாலும் பல்வேறு செயல்பாடுகளை திட்டமிட்டு அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றி விரும்பத்தக்க இலக்கினை அடைய மேலாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது

**9 மேலாண்மையின் அடிப்படை கருத்துகள்**: அறிவின் தொகுப்பு, மேலாண்மை கருவிகள், தனிப்பாடப்பிரிவு, சிறப்பீடுபாடு, நடத்தை விதி, பணி ரீதியானதொரு அமைப்பு

**10. மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவு செயலாக்கம்.

**11. மேலாண்மை ஒரு சிறந்த கடவுச்சீட்டு போன்றது விளக்குக** வணிக உலகம் அல்லது அரசுத்துறை அல்லது தனியார் துறை போன்றவற்றில் வேலைவாய்ப்பு உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கு சிறந்த கடவுச்சீட்டு போன்றது மேலாண்மை ஆகும்

**12. மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல் வணிகச் சட்டங்கள் உளவியல் புவியியல் பொருளியல் தரவு செயலாக்கம்

**13. மேலாண்மையின் நவீனமயமாக்கம் எதன் மூலம் நடைபெறுகிறது** ஏற்றுமதி மேலாண்மை ஆள்சார் மேலாண்மை உற்பத்தி மேலாண்மை சந்தை மேலாண்மை நிதி மேலாண்மை போன்ற மேலாண்மையின் பல்வேறு பகுதிகளில் கருத்தரங்கம் சிறப்பு பாடப்பிரிவுகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மேலாண்மை நவீனமயமானதாகவும் பிரபலமடைந்தும் வருகிறது

**14. மேலாண்மை ஒரு தனி பாடப்பிரிவு விளக்குக** பல்வேறு பல்கலைக்கழகங்களும் உயர் நிறுவனங்களும் மேலாண்மை கல்வியை தனிப்பிரிவாக அங்கீகரித்திருக்கின்றன

1951 இல் இருந்து வணிக மேலாண்மை மற்றும் நிர்வாக பாடத்தில் முதுகலைப் பட்டங்களை வழங்கும் தனிப்பட்ட சிறப்பு மேலாண்மை நிறுவனங்கள் தோன்றி வளர்ந்துள்ளது.

**15. வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக சந்தை நடைமுறையை தீர்மானிப்பது யாது** வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக விற்பவர்கள் ஜாக்கிரதை என்ற கோட்பாட்டு சந்தை நடைமுறையை தீர்மானிக்கிறது

**16. மேலாண்மை என்பது ஒரு கலையா அறிவியலா?**: மேலாண்மை என்பது ஒரு நுட்பமான அறிவியலாகும் என்று கூறினாலும் இது ஒரு துல்லியமில்லாத அறிவியல் என்றாகிறது

மேலாண்மை ஒரு கலை என்று நம்பினால் அது முழுவதுமான ஒரு கலை அல்ல

நிறைவாக மேலாண்மை என்பது ஒரு கலையும் அல்ல அறிவியலும் அல்ல இரண்டின் தொகுப்பாகும்

ஆனால் அறிவியல் பூர்வமான மேலாண்மை கோட்பாடுகளையும் திறமைகளையும் வெளிப்படுத்தி போட்டி நிறைந்த தொழில் வணிக உலகில் நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்றுதல் ஆகும்.

**17. மேலாண்மை செயல்முறையின் இரட்டை நோக்கங்கள்:**

அதிகபட்ச உற்பத்தி திறன் அல்லது லாபம் ஈட்டும் தன்மை

அதிகபட்ச மனித நலம் அல்லது திருப்தி

**18. வேளாண்மை செயல் முறைகளை விளக்குக**

**1.மேலாண்மை என்பது ஒருங்கிணைத்தல்**: ஒரு மேலாளர் என்பவர் அந்நிறுவனத்தின் மனித வளம் எந்திரங்கள் பொருட்கள் பணம் ஆகிய நான்கு வளங்களையும் அதன் செயல்பாடுகளையும் திறம்பட ஒருங்கிணைக்க வேண்டும்

**2. மேலாண்மை ஒரு செயல்முறை**: ஒரு மேலாளர் திட்டமிடல் ஒழுங்கமைத்தல் பணியமர்த்துதல் இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் மூலம் வளங்களை திரும்ப திறம்பட ஒருங்கிணைக்க வேண்டும்.

**3. மேலாண்மை என்பது ஒரு திட்டமிட்ட செயல் முறை**: மேலாண்மையும் நிறுவனமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்

**4. மேலாண்மை என்பது ஒரு சமூக செயல்பாடு ஆகும்** இது மற்றவர்கள் மூலம் குறிப்பிட்ட பொருளை பெறுவதற்கான கலை ஆகும்

**5. மேலாண்மை என்பது ஒரு சுழற்சியான செயல்முறை**: மேலாண்மை திட்டமிடல் செயல்பாடு கட்டுப்படுத்துதல் மறுமதிப்பீடு ஆகிய சுழற்சியை பிரதிபலிக்கின்றது.

| **19. அடிப்படை** | **மேலாண்மை** | **நிர்வாகம்** |
|---|---|---|
| பொருள் | ஒரு வணிக நிறுவனத்தின் மேலாண்மை செய்பவர்கள் மற்றும் விஷயங்களை நிர்வகிப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வழி என்று அழைக்கப்படுகிறது | ஒரு குழுவால் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான செய்முறையே நிர்வாகம் என்று அழைக்கப்படுகிறது |
| அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| தொடர்பு தன்மை | கொள்கைகளை செயல்படுத்துதல் | கொள்கைகளை உருவாக்குதல் |
| செயல்பாட்டு பரப்பு | நிர்வாகத்தின் கீழ் செயல்படுகிறது | நிறுவனத்தின் செயல்பாடுகள் மீது முழு கட்டுப்பாடு |
| பொருத்தம் | வணிக நிறுவனங்கள் போன்ற லாபம் ஈட்டுவதை மேற்கொண்டு நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு ஏற்றது | அரசு அலுவலகங்கள் ராணுவம் மன்றங்கள் வணிக நிறுவனங்கள் மருத்துவமனைகள் சமய மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்றது |
| முடிவுகள் | பணியை யார் செய்வது அதனை எப்படி செய்வது என்ன செய்ய வேண்டும் அதனை எப்போது செய்ய வேண்டும் செயல் திட்டங்களையும் கொள்கைகளையும் செயல்படுத்துதல் | திட்டங்கள் தீட்டுதல் கொள்கைகளை கட்டமைத்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல் |
| கவனம் செலுத்துதல் | மேலாண்மை பணி | வரையறுக்கப்பட்ட வளங்களை முடிந்தவரையில் ஒதுக்கீடு செய்தல் |
| முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| பிரதிநிதி | ஊதியத்திற்காக பணிபுரியும் பணியாளர்கள் | தனது முதலீட்டின் மூலம் ஆதாயம் பெறும் உரிமையாளர்கள் |
| பணி | நிர்வாகம் மற்றும் ஆளுமை | சட்டம் மற்றும் தீர்மானித்தல் |

**20. மேலாண்மை ஒரு சமூக செயல்முறை விளக்குக**: மனிதவளத்தை மேலாண்மை செய்வதன் மூலம் பணியாளர்களின் குழு உழைப்பு பணியாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் பணியாளர்களின் செயல்பாட்டை ஒருங்கிணைப்பதோடு தொடர்புடைய சமூக செயல்முறையே மேலாண்மை ஆகும்

**21. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை?**
அறிவியல் கட்டைவிரல் விதி அல்ல
இணக்கம் சச்சரவின்மை
மனப் புரட்சி
தனிமனித தத்துவமல்ல ஒத்துழைப்பு
ஒவ்வொருவருக்கும் அவரவர் திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி
**22. டேலரின் மேலாண்மை தத்துவங்களை விளக்குக**
**1.அறிவியல் கட்டவிரல் விதியல்ல** கட்டைவிரல் விதி என்பது மேலாளர் தனது தனிப்பட்ட தீர்ப்புகள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவு ஆகும்
டேலரின் கருத்துப்படி காரணங்கள் விளைவுகள் இவற்றுக்கிடையே உறவுகளை அறிவியல் அடிப்படையிலான விசாரணை மூலம் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்
அப்போது மனிததிறனையும் நேரத்தையும் சேமிக்க உதவும்
**2. இணக்கம் சச்சரவின்மை** மேலாண்மைக்கும் பணியாளருக்கும் மிகச்சிறந்த ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை டேலர் வலியுறுத்துகிறார்
பரஸ்பர நம்பிக்கை மற்றும் சரியான புரிதலுடன் கூடிய குழு செயல்பாடு உழைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சரியாகப் புரிந்துகொள்ள உதவும்
**உதாரணமாக ஜப்பானிய நிறுமங்களில்** மரபுவழி மேலாண்மை முறை காணப்படுகிறது
பொதுவாக பணியாளர் வேலை நிறுத்தம் செய்தாலும் கருப்புப் பட்டை அணிந்து செல்லுதல் மற்றும்
செய்யும் பணியினை காட்டிலும் கூடுதலான நேரம் பணிபுரிந்து அதன் மூலம் நிர்வாகத்தை கவர்ந்து இழுத்து அதன் மூலம் தொழில் நிறுவனத்தின் இலக்கினை எட்டி தனது கோரிக்கைகளையும் வலியுறுத்துகின்றனர்
**3. மன புரட்சி** நிர்வாகம் பணியாளர்கள் இவ்விருவருக்கும் மற்றவர் மீதான மனப்பாங்கு கண்ணோட்டமும் முற்றாக மாற வேண்டும்
ஒவ்வொரு முதலாளியும் தனது செழிப்பை தனது பணியாளர்களின் செழிப்பு மூலமே அடைய செய்ய முடியும் என்பதை எப்போதும் மனதில் இருத்த வேண்டும் .
இலாப உபரியை பணியாளர்களோடு பகிர்ந்து கொள்ளுதல்
பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
வேலைப் பகிர்வு
ஒற்றுமை உணர்வு
நேர்மறை மனநிலை
ஒழுங்கு உணர்வு
நேர்மை போன்றவற்றின் மூலமே சாத்தியம்
**4. தனிமனிதத்துவமல்ல, ஒத்துழைப்பு** இக்கோட்பாடு சச்சரவின்றி ஒற்றுமை என்ற கோட்பாட்டின் விரிவாக்கம்
ஒத்துழைப்பு பரஸ்பர நம்பிக்கை நல்லெண்ண உணர்வு ஆகியவை மேலாளர் மற்றும் தொழிலாளரிடம் மேலோங்கி இருக்கவேண்டும்
நிர்வாகம் தொழிலாளர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்க வேண்டும்
எடுத்துக்காட்டாக பயனுள்ள ஆலோசனை உற்பத்தி செலவை குறைப்பதாகவோ உற்பத்தியை அதிகரிக்கவும் இருந்தால் உரிய சன்மானம் அளிக்கலாம்
**5. ஒவ்வொரு நபரும் அவரது மிகச்சிறந்த திறனுடன் மற்றும் செழிப்புடன் வளர்ச்சி அடைதல்** எந்த ஒரு தொழில் அமைப்பின் திறனும் அதன் தொழிலாளர்களின் திறமைகளையும் திறன்களையும் பெருமளவு சார்ந்துள்ளது
திறமையான செயல்திறமிக்க வகையில் அறிவியல்பூர்வ முறையில் உரிய பணியாளர்களை தேர்வு செய்ய வேண்டும்
தொழிலாளர்களின் உடல் தகுதி மன மற்றும் அறிவுத்திறன் அடிப்படையில் அவர்களுக்கு உரிய பணியினை ஒதுக்க வேண்டும்
**23. நவீன மேலாண்மையின் தந்தை:** திரு. ஹென்றி போயல்
**23.அ. நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்**
வேலைப் பகிர்வு
அதிகாரமும் பொறுப்பும்
ஒழுங்குமுறை
கட்டளை ஒருமை
ஒருமுனை இயக்கம்
பொது நலனுக்காக தனி நலன் புறக்கணிக்கப்பட வேண்டும்
ஊதியம்
மையப்படுத்தலின் தரம்
ஆனையுரிமை வரிசை / தரவரிசை தொடர்
முறைமை
நேர்மை நெறி
பணியாளர்களின் காலவரையறையின் நிலைத்தன்மை

தன் முயற்சி திறன்
குழு பிணைப்புணர்ச்சி / குழு ஒற்றுமை

**24.வேலைப் பகிர்வு**

தொழில் அமைப்பின் மொத்த பணிச்சுமையும் சிறிய பணிகளாக பகிர்வு செய்யப்படுகிறது ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப் படுவது வேலைப் பகிர்வு ஆகும்

**25. கட்டளையொருமை**

ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும் அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்

**26. ஒரு முனை இயக்கம்**

அனைத்து தொடர்புடைய நடவடிக்கையும் ஒரே குழுவில் இருக்க வேண்டும் அதற்கு ஒரே செயல் திட்டம் இருக்க வேண்டும் அவர்கள் ஒரே மேலாளரின் கீழ் பணியாற்ற வேண்டும்

**27. மையப்படுத்தலின் தரம்**

முடிவெடுக்கும் அதிகாரம் நிர்வாகத்தின் உயர்மட்டத்தில் குவிந்து கிடப்பது மையப்படுத்தல் வெளிப்படுத்துகிறது

**28. அதிகாரம்**

அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையை குறிக்கும்

**29. ஆணையுரிமை வரிசை / தரவரிசை தொடர்**

ஆணையுரிமை வரிசை உயர்மட்ட அலுவலரிடம் இருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ் நோக்கி வருவதைக் குறிக்கும்

**30. பணியாளர்களின் காலவரையறையின் நிலைத்தன்மை**

ஒரு தொழில் நிறுவனம் செம்மையாக இயங்க வேண்டும் எனில் பணியாளர்கள் அடிக்கடி நியமனம் பெறுவதும் வேலையை துறந்து விட்டு செல்வதும் நிகழக்கூடாது

**31. பொறுப்பு:** உயர் அலுவலர் வழங்கும் ஆணைகளை நிறைவேற்றும் கடமையை குறிக்கின்றது

**32. ஒழுங்குமுறை**

இது கீழ்ப்படிதல் மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல் அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும்
இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்

**33. பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்பட வேண்டும்**

நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன்னிறுத்த வேண்டும்

எனவே தனிப்பட்ட நபர்களின் தனி நலனைவிட தொழில் நிறுவனத்தின் நோக்கமே அனைத்தையும் விட மேம்பட்டு இருக்க வேண்டும்

**34.ஊதியம்**

ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலை ஆகும்

பணியாளருக்கு கொடுக்கப்படும் ஊதியமே தொழில்களை ஊக்குவிக்கும் முதன்மையான ஊக்குவிப்பாக இருந்து உற்பத்தி அதிகரிப்பதால் அவர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் முறைமை

அதிகாரப்பூர்வ செயல்முறைகள் வழியாக ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

முறைமை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும் விதிகளில் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்

**35. நேர்மை நெறி**

இக்கோட்பாட்டின்படி பணியாளர்கள் அன்புடன் நடத்தப்பட வேண்டும் மற்றும் பணியிடத்தில் நீதிமுறை உறுதிப்படுத்தப்படவேண்டும்

மேலாளர்கள் எல்லா பணியாளர்களையும் எவ்வித வேறுபாடுமின்றி நியாயமாக பாகுபாடின்றி ஒரே நிலையில் சமமாக பாவித்து நடத்தப்பட வேண்டும்

அனைத்து பணியாளர்கள் மீதும் சமமான கவனம் செலுத்தப்பட வேண்டும்

**36. தன்முயற்சி திறன்**

பணியாளர்களின் தன்முயற்சி திறனை ஊக்குவிப்பதன் மூலம் தொழில் நிறுவனத்தை பலப்படுத்தவும் புதிய வழிமுறை அறிமுகப்படுத்தவும் முடியும்

தொழிலாளர்களுக்கு திட்டம் தீட்டவும் அத்திட்டத்தை செயல்படுத்தவும் தன்னுரிமை அளிப்பதன் மூலம் நிறுவனத்தின் திறனை உயர்த்த வழி ஏற்படுகின்றது

புதிய மற்றும் சிறந்த கருத்துக்களை தொழிலாளர்களிலிடமிருந்து பெறமுடிகின்றது

இதன் மூலம் தொழிலாளர்களை தொழில் நிறுவனத்தின் பணிகளில் மிகுந்த ஆர்வமுடன் பங்கேற்க செய்ய முடியும்

**37. குழு பிணைப்புணர்ச்சி / குழு ஒற்றுமை**

இக்கோட்பாட்டின்படி மேலாளர்கள் பணியிடத்தில் தனித்தனியாகவும் சமூகமாகவும் பணியாளர்க்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பது உறுதிப்படுத்தவேண்டும்

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை ஏற்படும் சூழலை உருவாக்குவதற்கும் இது உதவும்

குழு ஒற்றுமை உணர்வு குறித்த பணியினை குறித்த காலநேரத்திற்குள் செய்து முடிக்க உதவுகிறது